இணைப்பு

(361 ஆம் பக்கத்தில் இனம் 3 (2) க்கான அடிக்குறிப்பைக் காண்க)

கீழ்க்கண்ட அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(1) 1980 ஜூன் மாதத்திற்கான சம்பளத்தை வழங்குதல்.

(2) 3—6—60-ல் வேலை நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் 19—4—1980-ல் திரும்ப வேலையில் அமர்த்தப்பட்ட ஐந்து தொழிலாளர்கள் தொடர்ந்து பணியில் இருந்ததாகக் கருதப்பட வேண்டும்.

(3) முதலுதவி வசதிகள் செய்து கொடுத்தல்.

(4) வாசம் இருமுறை ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஒரு சலவைக்கட்டி வழங்குதல்.

(5) இரவு 10 மணிக்கு மேல் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 50 பைசாவிலிருந்து ரூபாய் 1 ஆக படியை உயர்த்திக் கொடுத்தல்.

(6) அவர்கள் வேலை நிறுத்தம் செய்த 3 தினங்களை அவர்கள் ஈட்டிய விடுப்பிலிருந்து ஈடு செய்தல்.

(7) தொழிலாளர்கள் ஒரு சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்காக இடம் கேட்டனர். அந்த நிர்வாகத்தின் பொது மேலாளர் அவர்களுக்கு சிற்றுண்டி நடத்துவதற்கு இடம் கொடுக்க முன்வந்தும் தொழிலாளர்கள் எந்த வித முயற்சியும் மேற் கொண்டதாகத் தெரியவில்லை.

தொழிலாளர்களின் முக்கிய பிரச்சினையான அவர்களை நிரந்தரமாக அமர்த்துவது பற்றி சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுடன் 4—3—81 அன்று பேச்சு வார்த்தைகள் நடத்தும் பொருட்டு தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்ததன் பேரில் 27—2—1981 (இரவு) நாளிலிருந்து அவர்கள் தங்களுடைய உண்ணா நோன்புப் போராட்டத்தை விலக்கிக் கொண்டு விட்டார்கள்.

அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 4—3—1981 அன்று சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடனும் தொழிற்சங்கத் தலைவர்களுடனும் தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அரசு தரப்பில் நிதிச் செயலர், சமூக நலத்துறை இணைச் செயலர் மற்றும் சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

1981 மார்ச் 25]

பேச்சு வார்த்தையின் விளைவாக அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் படுத்துவதுடன் மற்றும் அதற்குப் பதிலாக அந்தத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுத் தொழிற்சங்கம் (Industrial Co-operative Society) அமைத்துக் கொடுப்பது ஆகிய இரண்டினையும் பரிசீலனை செய்து அரசு விரைவில் முடிவு எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது. தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த முடிவுக்கு சம்மதம் தெரிவித்தனர்.

மேற்கூறிய அறிக்கையிலிருந்து தொழிலாளர்களுக்கு உள்ள அனைத்து வசதிகளையும் அரசு செய்து வருகிறது; அனால் உற்பத்தியில் தொழிலாளர்கள் ஆர்வம் காட்டவில்லை என்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்டுள்ளது.

4—3—1981 அன்று நடந்த கூட்டத்தில் அவர்கள் முழு முயற்சியுடன் தொழிலில் ஈடுபட வேண்டுமென்றும் அரசுக்கு நஷ்டம் ஏற்படாதவாறு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் தொழிலாளர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு அவர்கள் தரப்பில் சம்மதம் தெரிவித்தனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS